"போர்வாள்"

சந்தா விபரம்

★

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்;
மா. இளஞ்செழியன், B.A. (Hons)

திராவிடர்
வாரந்தாள்

தனி இதழ் அணு 1½
வெளிநாடு அணு 2

வாள் 3

சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 22
8—[illegible]—49 சனிக்கிழமை

வீச்சு 7



ன்முகன் (பிரம்மா) :—கண்ணே! உன் மதிபோன்ற முகம் மங்கியிருக்கக் காரணமென்ன? என்மீது ஏதாவது கோபமா?

ஸ்வதி :—அதெல்லாம் ஒன்றுமில்லை, நாதா! பரதகண்ட மெங்கும் சென்ற வாரம் சரஸ்வதி பூஜை என்ற பெயரால் எனக்கு விழாக்கொண்டாடி இருக்கிறார்கள் மக்கள், அதைப்பற்றி நினைத்தேன். எனவே தான் துக்கம் நெஞ்சைத் துளைக்கிறது.

ன்முகன் :—எனக்கொன்றும் புரியவில்லையே கண்ணே நீ பேசுவது! உன்னை நினைத்து மக்கள் விழாக் கொண்டாடினால் களிப்பதுதானே முறை, துக்கப்படுவது ஏன்?

ஸ்வதி :—துக்கம் மட்டுமா, வெட்கமும் அல்லவா என் நெஞ்சை அரித்துத் தின்கிறது! நூற்றாண்டு நூற்றாண்டு காலமாக கல்வித் தேவதையாகிய எனக்கு விழாக் கொண்டாடும் இந்த மக்கள் 100க்கு 85 பேர் தற்குறிகளாகவே இருக்க, என்னைப் பற்றிக் கனவிலும் கருதாத சோவியத் ரஷ்ய மக்கள் 100க்கு 100 படித்தவர்களாக இருக்கிறார்களே, இது எனக்குத்தானே அவமானம் நாதா! இதை நினைத்தால் துக்கம் பீறிட்டெழாமல் களிப்பா பிறக்கும் எனக்கு? சொல்லுங்கள், நாதா!

# கேட்கக் கேட்க வெட்கமாகுதே!

"தினம் இரண்டு வேளை சாப்பிட்டால் எப்படியிருக்கும், என்ன விதமான திருப்தி ஏற்படும் என்பதையே துளியும் அறியாத மக்கள் இந்தியாவில் கோடானு கோடிப் பேர்".

"தங்களுக்குச் சொந்தமான ஆடுமாடுகளுடன் அந்த ஆடுமாடுகளைப் போலவே ஒன்ருகத் தங்கி செத்தவாழ்வு வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் இந்தியாவில் இலட்சோபி இலட்சம்."

"அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மட்டும்தான் இவ்வளவு மோசமாக இருக்கிறது என்று எண்ணிவிடவேண்டாம்! அவர்களிடம் கல்வி என்பதுகூட மருந்துக்கும் கிடையாது, அவர்கள் கோடானுகோடிப் பேரும் அறியாமை என்னும் பேரிருளில் மூழ்கிக் கிடந்து தவிக்கிருர்கள். இந்த அறியாமைச் சிறையிலிருந்து அவர்கள் விடுதலை பெற வழி வகுப்பதே அவர்களுக்குச் செய்யப்பட வேண்டிய முதல் உதவி ஆகும்."

"எப்போது அவர்களுடைய வருமானமும் வாழ்க்கைத் தரமும் மிகமிக மட்டமாக இருக்கிறது என்பது நன்ருகத் தெரிகிறதோ, அப்போதே, அவர்களிடம் கல்வியறிவோ, விஞ்ஞான ஒளியோ காணப்படாது என்பதை நாம் நன்ருகத் தெரிந்துகொள்ளலாம்."

"பழங்காலத்தில், உலகப் புகழ் பெற்ற சில விஞ்ஞானிகள் இந்தியாவில் இருந்தார்கள் என்ற பெருமையோ, அல்லது, சமுதாயக் கட்டிடத்தின் உச்சாணி மண்டபத்தில் உலவும் ஒரு சில மக்கள் கற்றறிந்தவர்களாக இருக்கிருர்கள் என்ற உண்மையோ நான் மேலே குறிப்பிட்ட பரிதாப நிலையை ஒரு சிறிதும் மாற்றிவிடாது."

"பஞ்சம், பட்டினி, அறியாமை, நோய்கள் ஆகிய இவற்றிலிருந்து மக்களைக் கரையேற்றுவதே ஆட்சியாளர்களின் முதல் கடமையாக இருக்கவேண்டும்—அப்படித்தான் இருக்க முடியும்!"

"அப்படிப்பட்ட இழிநிலையிலிருக்கும் மக்களின் சூழ்நிலை, உலக அமைதியையே குலைக்கக்கூடிய ஒரு பேராபத்தின் சின்னம் என்பதை எவரும் மறுத்தல் இயலாது."

* * *

இந்தியா இந்நாளில் இருண்ட வீடாகத்தான் காட்சி தருகிறது என்ற இந்தக் கசப்பு மொழியை வழங்கியவர்கள் இந்தியாவின் மீது வெறுப்புணர்ச்சி கொண்ட வெளி நாட்டவர்களுமல்ல, அல்லது, இந்தியாவை ஆளும் பாரத புத்திரர்கள் மீது பழிச்சொல்லை வீசி, அவர்கள் இந்தியாவை ஆளும் இலட்சணம் இதுதான் என்று காட்டி, அதன் மூலம் அவர்களை ஆட்சிப் பீடத்திலிருந்து கீழே உருட்டிவிட்டு, தாங்கள் அந்த நாற்காலியில் ஏறி அமர ஆசைப்படும் மாற்றுக் கட்சி உறுப்பினர்களுமல்ல! அல்லது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாகவே இருந்தபோதிலும் தங்களுக்கு ஆட்சிப்பீடத்தில் இடம் தரப்படவில்லை என்ற காரணத்திற்காக, ஆட்சியாளர்களைத் தாக்கும் பண்பு கொண்டவர்களாகக் காணப்படும் பிரகாசம் காருகளுமல்லர் இந்தச் சொல்லோவியம் தீட்டியவர்கள்!

பட்டினி—அறியாமை — இருள் ஆகியவை மண்டிக்கிடக்கும் மண்டலமாக இருக்கிறது இந்தியா என்பதை இவ்வளவு அழுத்தந் திருத்தமாக எடுத்துக் கூறியிருப்பவர் இந்திய சர்க்காரிலே பொறுப்புள்ள பதவி வகிப்பவர்! அதிலும், இந்திய சர்க்காரின் சார்பிலே, உலக மன்றத்தின் கலை, கல்வி, விஞ்ஞானக் கழகத்திற்குப் பிரதிநிதியாக அனுப்பப்படும் அளவுக்கு சர்க்காரின் உள்ளத்தைக் கவர்ந்த உயர்திறம் வாய்ந்தவர்.

சர்க்காரின் பிரதிநிதி — ஆகவே சர்க்காரின் கையாலாகாத்தனத்தையும் திறமையின்மையையும் எடுத்துக் காட்டவே இந்த மொழிகளை வீசியிருக்கிருர் என்று கூற முடியாது.

காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்திலும் செல்வாக்கிலும் இருப்பது டில்லி சர்க்கார், அந்த டில்லி சர்க்காரில் சிறப்பானதோர் இடம்பெற்று நிகழ்பவர் இவர்—எனவே, காங்கிரசின் நட்புக்கு இழுக்குத் தேடும் எண்ணம் படைத்தவர் என்றும் கூறுவதற்கில்லை.

இந்திய சர்க்காரின் கல்வித் துறைச் செயலாளர், உலக மன்றத்தில் இந்தியாவின் பிரதிநிதி, ஐ. நா. சபையின் கல்விக் கழகத்தில் இந்தியாவின் சார்பில் பேசுவதற்காக அனுப்பப் பட்டிருக்கும் சிறப்புறுப்பினர் ஆகிய இவ்வளவு பொறுப்புள்ள பதவிகளையும் வகிப்பவர் **டாக்டர் தாராசந்த்!** அவர்தான் கூறியிருக்கிருர், இந்தியாவில் கோடானு கோடி மக்கள் ஆடுமாடுகளைப் போல மண் குடிசைகளில் மண்டிக் கிடந்து மரணத்துடன் போராடுகிருர்கள் என்று!

இந்திய சர்க்காருக்கு எவ்வளவு அருமையான பாராட்டுத்தாள்!

ஆளவந்தார்களின் திறமைக்கு தகுதிக்கு, ஆற்றலுக்கு எத்தகைய புகழ்மாலை!!

**இரண்டு வேளை பட்டினி! ஆடுமாடுகள் போன்ற வாழ்வு!—இதுதான்,** இந்திய சர்க்கார், இந்திய மக்களில் கோடானு கோடிப் பேருக்கு அளித்துள்ள பரிசு என்பதை, இந்திய சர்க்காரின் எதிரிகள் அல்ல, மாற்றுக் கட்சிப்பகைவர்கள் அல்ல, வேற்று நாட்டு விரோதிகளுமல்ல, சர்க்கார் உயர்தர அதிகாரியே கூறுகிருர். எவ்வளவு வெட்ககரமான சம்பவம்! இதை ஏடுகளில் படித்தபோது, இவ்வளவு பரிதாபகரமான நிலையில் கிடந்து தவிக்கும்படி மக்களை விட்டுவைத்திருக்கும் ஆட்சியாளர்களால் ஆளப்படும் "துர்ப்பாக்கியம்" நமக்கு நேரிட்டதே என்பதை எண்ணி வேதனை காந்து ஆயிற்று நம் உள்ளம். நமக்கே இந்நிலை என்ருல் அன்னை பாரத தேவியின் அருமந்த புத்திரர்கள் டாக்டர் தாராசந்தின் இந்த அரிய படப்பிடிப்பை தினசரித் தாள்களில் படித்தபோது, வெட்கமும் துக்கமும் அவர்கள் உள்ளத்தை எவ்வளவு துளைத்திருக்குமோ யார் கண்டார்கள்! பாபம்! பரிதாபம்!!

இலட்சோபி இலட்சம் மக்கள் பட்டினி கிடக்கிருர்கள்—இரண்டு வேளை உணவு என்ருல் என்ன என்பதையே அறியாமல் வாழ்கிருர்கள்—இதுதானய்யா காங்கிரஸ் சர்க்காரின் மகத்தான சாதனை என்று சொன்னால் அந்தக் கட்சி உறுப்பினர்கள் எப்படி, தலைகுனியாமல் இருக்க முடியும்? வேதனை வேதனை என்று கூறி, விழிகளில் நீர் அருவி பெருக்கி, உள்ளம் உடைந்தவர்

(12-ம் பக்கம் பார்க்க)




தொடர்கதை :

[முன்பு: சேர மன்னன் சேந்தனுடன் வேட்டைக்குச் சென்ற அவனது படை வீரன் தூயமணி, காட்டில், மன்னன் கட்டளைப்படி ஓர் மானைப் பிடிக்க ஓடுகிறான், வழியில் சேரன் ஒழிக என்று முணுமுணுத்துக் கொண்டிருக்கும் கிழவன் ஒருவனைக் கண்டு கோபத்தால் அவன் கன்னத்தில் அறைகிறான். கிழவனோ புன்னகையுடன் தன் முதுகில் இருக்கும் பெரிய புண் ஒன்றைக் காட்டி, "இதுதான் சேர நாட்டு வரலாறு!" என்கிறான். திகைப்படைந்த தூயமணியை, கிழவன், இரகசியக் குகைக்கு அழைத்துச் சென்று, தன் வரலாற்றைக் கூறுகிறான். தான், தன் இளமைக் காலத்தில் பாண்டியன் அரசசபையில் இசைப் புலவனாக இருந்தபோது, பாண்டியன் மகள் மலர்க்கோதை தன்னைக் காதலிக்க, இருவருமாகத் தப்பியோடி ஒரு காளி கோயிலை அடைந்ததை, கிழவன் விவரமாகக் கூறுகிறான். பிறகு...]

பத்தாம் பகுதி

## அழிவின் ஆரம்பம்

மலர்க்கோதையும் நானும் காளிகோயிலையே எங்கள்பதுங்கும் இடமாகக் கொண்டிருந்தோம். பகல் முழுவதும், பாராள்வோனின் ஏவலர்களின் பார்வையில் படாமல் இருக்க, இருள் கவ்விக்கொண்டிருந்த, நுழைந்தாலே பாபமென்று கூறப்பட்டிருந்த காளியின் சயன அறையிலேயே இளவரசியும் நானும் அடைப்பட்டுக் கிடந்தோம்! தூயமணி, அடைபட்டுக் கிடந்தோம் என்றா கூறினேன்? இல்லை, இல்லை, இன்பப் பெருவெள்ளத்தில், தடையில்லாமல் இடைவிடாது ஆழ்ந்து—மூழ்கி—திளைத்திருந்தோம்! அறையில் இருள் தேங்கியிருந்தது, எங்கள் உள்ளத்தில் பூரிப்பும்பெருமகிழ்ச்சியும் பொங்கி வழிந்துகொண்டிருந்தது! இரவானதும், களிப்பின் கட்டிலிருந்து விடுபட்டு, சயன அறையை விட்டு வெளியே வருவோம்! காளிகோயில் முழுவதும் சுற்றிச் சுற்றி வருவோம்! ஓடுவோம்! ஆடுவோம்! மெல்லிய குரலில் சிற்சில நேரங்களில் பாடவும் செய்வோம்!

இப்படியே நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன! இளவரசியின் தோழி இசையொலி அடிக்கடி வருவாள்! அரண்மனையில் நடைபெறுபவைகளைக் குறித்துக் கூறுவாள்! அரசனின் ஆட்கள் அண்டத்தின் பலதிசைகளிலும் அலைந்து சுற்றி, இளவரசியைக் கண்டு பிடிக்க முடியாமல் ஏமாற்றத்தோடு திரும்புவதையும், கண்கள் சிவக்க, மீசை துடிக்க மன்னர் அவர்களை கோபக் கணைகளால் குத்துவதையும், பிறகு உள்ளம் பதறுவதையும் இசையொலி கூறும்போது நாங்கள் சிரித்துக் கொண்டே ரசபாவத்தோடு அவற்றைக் கேட்போம்! சில நாட்களில் பகலிலும் எங்களோடே இசையொலியும் சயன அறையிலேயே தங்கி விடுவாள். சயன அறையின் கதவை மூடிவிட்டால், அதனுள் எவ்வளவு உரத்த குரலில் பேசினாலும், வெளியில் ஒரு சிறிதும் சப்தம் வராது.

இளவரசி தாய் ஆகப்போகும் நிலைக்கு வந்துவிட்டாள், அந்த மகிழ்ச்சி என் உள்ளத்தைத் தழுவிக்கொண்டிருந்த நேரத்தில், துக்ககரமான செய்தியொன்று எங்கள் காதிற்கு எட்டியது! எதிர் பார்த்ததுதான் எனினும் அதனை அறிந்ததும், பெருத்த திகைப்பும் திடுக்கமுமடைந்தோம்.

பாவை ஒருவளிடம் கொண்ட காமத்திற்காகப் பாரையாளும் பொறுப்பையும் கடமையையும் பாண்டிய மன்னர் மறந்தார். ஆரியப் பெண்ணின் ஆலிங்கனத்தால் அகமகிழ்ந்ததோடு நில்லாமல், அவளை அரசபீடத்தில் அமர்த்திவிட்டார்! ஆம், ஆரியப் பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொண்டார்.

"பாண்டிய நாட்டிற்கு உரிமை கொண்டாட ஒரு ஆரியப் பெண்ணா? இதனை எண்ண எண்ண வேதனை அதிகமாகிறது! நெஞ்சம் பதறுகிறது! மக்கள் ஆத்திரத்தால் சிரிக்கிறார்கள்! கேலிச் சிரிப்பா அது? அல்ல! அல்லவே அல்ல! வேதனைச் சிரிப்பு! இந்த முயற்சியை—ஆரியப் பெண்ணின் ஆட்சியை—தாங்கள்தான் எப்படியாவது தடுக்கவேண்டும்" என்று, அரண்மனையின் நந்தவனத்தில், தாழை இலை பின்பக்கம் நின்றிருந்த மேடையின்மீது அமர்ந்திருக்கையில், இளவரசி மலர்க்கோதை கண்ணீர் சிந்திய வண்ணம் கூறியது என் நினைவிற்கு வந்தது.

"இந்த முயற்சியை — ஆரியப் பெண்ணின் ஆட்சியை—தாங்கள் தான் எப்படியாவது தடுக்கவேண்டும்"—என் திறமையிலும் ஆற்றலிலும் எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தால், என் கண்மணி இப்படிக் கூறியிருப்பாள்! அந்த நம்பிக்கை இப்பொழுது என்ன வாயிற்று?

எதிர்பாராது ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் காரணத்தால், ஏதும் செய்ய முடியாத நிலையில், எந்திழையும் நானும் காளி கோயிலில் அடைபட்டுக் கிடக்கவேண்டியதாயிற்று.

(10-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறது! பார்ப்பதற்கு உண்மை போலவேகூட கொஞ்சம் தோற்றமளிக்கிறது வாதம்! தயாரித்திருப்பவர் ஆச்சாரியார் அல்லவா! ஒரு காலத்தில் சிறந்த வக்கீலாக இருந்தவரல்லவா! எனக்கு வழக்காடத் தெரியுமே தவிர நாடாளத் தெரியாது என்று முன்னர் ஓர் முறை முதலமைச்சராக இருந்த காலத்தில் அவரேதானே கூறினார்! அந்த வழக்கறிஞர் திறமையைத்தான் திறம்படப் பயன்படுத்தி, மிக அரிய முறையில் உருவாக்கியிருக்கிறார் வாதத்தை என்றாலும் கொஞ்சம் கூர்ந்து பார்த்தவுடனே வாதம் எவ்வளவு பொருளற்றது என்பது நன்றாகப் புலப்படத்தான் செய்கிறது. என்னதான் தங்க முலாம் பூசியிருந்தாலும், முலாம் கலைந்ததும் வெள்ளி வெள்ளியாகத்தானே காட்சியளிக்கும்!!

ஆச்சாரியார் அவர்கள் குறிப்பிட்டிருப்பது போல இந்நாளில் தொழிலாளர்களின் கூலி உயர்ந்திருப்பது உண்மை. ஆனால் அதே சமயத்தில், அந்தக் கூலி உயர்ந்த காரணத்தால் முதலாளிகளின் இலாபம் குறைந்திருக்கிறது என்றாரே, அது உண்மை அல்ல! தொழிலாளர்களின் கூலியில் ஏற்பட்டுள்ள உயர்வு முதலாளிகளின் இலாபம் குறைந்ததால் ஏற்பட்டுள்ள விளைவு அல்ல! முதலாளிகளின் இலாபம் முன்னாளைவிட இந்நாளில் சிறிதும் குறைந்துவிடவில்லை. குறையவில்லை என்பது மட்டுமல்ல, பலருக்கு, இலாபம், முன்னாளைவிட இந்நாளில் அதிகம் கூட!

என்னப்பா இது, தொழிலாளர்களின் கூலி உயந்துவிட்டது என்பதையும் ஒப்புக்கொள்கிறாய், முதலாளிகளின் இலாபமும் குறையவில்லை என்கிறாய், அப்படியானால் தொழிலாளர்களின் கூலி உயர்வுக்கான பணம் எப்படி வந்தது என்று கேட்கத் தோன்றும் நண்பர்களுக்கு.

கேள்வி, நியாயமானது!

பதில், இது:—

தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பண்டங்களின் விலை முன்னாளைவிட இந்நாளில் ஒன்றுக்கு நாலாக, ஐந்தாக, பத்தாக, இருபதாக உயர்ந்திருக்கிறது. இந்த விலை உயர்விலிருந்துதான் தொழிலாளர்களின் கூலி உயர்வு ஏற்பட்டிருக்கிறது—முதலாளிகளின் இலாபம் குறைந்ததால் அல்ல!

நாம், அதாவது பண்டங்கள் வாங்குவோர், முன்னர் 2 அணாவுக்கு வாங்கிய பண்டத்தை இப்போது 10 அல்லது 12 அணாவுக்கு வாங்குகிறோம் இதனால் விலையில் ஏற்பட்டுள்ள 8 அல்லது 10 அணா உயர்விலிருந்து ஒரு சில அணாக்கள் தொழிலாளர் கூலி உயர்வாக உருமாறியிருக்கின்றன. இது தான் உண்மை.

பிர்லா தன் இலாபத்தைச் சிறிதும் குறைத்துக் கொள்ளவில்லை. மாறாக விலையை மிக மிக ஏற்றி வைத்து நம்மையும் அதிக விலை கொடுத்து பண்டங்களை வாங்கச் செய்து, அந்த '**அதிக விலை**'யிலே ஒரு பகுதியைக் கொண்டு தொழிலாளர்தம் கூலியை உயர்த்திவிட்டு மற்று ஒரு பகுதியைக் கொண்டு மூலப் பொருள்களின் விலை உயர்வைச் சமாளித்து விட்டு, மிச்சமிருக்கும் பகுதியை எல்லாம் **தன் இலாபத்தை அதிகமாக்கிக் கொள்ள**, இலாபத்தோடு இலாபமாகச் சேர்த்துக் கொள்கிறார் பிர்லா.

நியாயமாக, பிர்லாவின் கொள்ளை லாபம் குறைந்து, அந்தக் குறைவிலிருந்து தொழிலாளர் கூலி உயர்ந்திருக்க வேண்டும். நடந்திருக்க வேண்டியது அது. ஆனால் நடந்தது......

அது அல்ல. இது!

நம் போன்ற பண்டம் வாங்குவோரின் அதாவது மத்தியதர வகுப்பாரின் வாழ்க்கைச் செலவுப் பணத்தில் ஒரு பகுதி தொழிலாளர்க்குச் சென்று அவர்கள் கூலியை உயர்த்தியிருக்கிறது.

''சரி, எப்படியிருந்தாலென்ன? தொழிலாளர்கள் கூலி உயர்ந்திருப்பது உண்மைதானே! ஆகவே அவர்கள் சர்க்காருக்கு அதிகப் பணம் தர வேண்டியது நியாயந்தானே'' என்று சிலர் கேட்கக் கூடும்.

இந்த வாதமும் சரியானதன்று. ஏனெனில். தொழிலாளர்களின் கூலி **பெயரளவுக்கு** உயர்ந்திருக்கிறதே தவிர, **உண்மையில்** உயரவில்லை. 4 ரூபாயாக இருந்த கூலி 8 ரூபாயாக ஆனதும், எல்லாப் பண்டங்களும் ஒன்றுக்கு இரண்டாக விலை ஏறிவிட்டால், பெயரளவுக்கு கூலி ஒன்றுக்கு இரண்டாக ஆகியிருந்தாலும் உண்மையில் கூலி உயரவில்லை என்றுதான் பொருள்.

ஏனெனில் முன்னர் 4 ரூபாய்க்கு ஒருவன் எவ்வளவு பண்டங்களை வாங்க முடிந்ததோ அதே அளவு பண்டங்களைத்தான் அவன் இப்போது 8 ரூபாய் கொடுத்து வாங்க முடியும். அதாவது அவனுடைய வாங்கும் சக்தி சிறிதும் உயரவில்லை.

கூலி, 4 ரூபாயிலிருந்து 8 ரூபாயாக உயர்ந்ததும், பண்டங்கள் யாவும் ஒன்றுக்கு 4 மடங்கு விலை ஏறிவிட்டால், பெயரளவுக்கு அவன் கூலி இரண்டு மடங்காக உயர்ந்ததே தவிர, உண்மையில் அது பாதியாகக் குறைந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது அவன் முன்பு 4 ரூபாய் கொடுத்தால் பெறக்கூடிய அதே பண்டங்களை இப்போது 16 ரூபாய் கொடுத்தால்தான் பெற முடியும். ஆனால் அவனுக்கு இப்போது கிடைக்கும் கூலியோ 8 ரூபாய் தான். ஆகவே அவன் முன்னைவிட இப்போது பாதிப்பண்டங்கள்தான் வாங்க முடியும். அதாவது அவனுடைய வாங்கும் சக்தி முன்னைவிட இப்போது குறைந்து விட்டது, கூலி உயர்ந்திருந்தும்கூட!

உண்மைக் கூலி என்பது இந்த வாங்கும் சக்திதான்.

கூலி உயர்கிறபோது, பண்டங்களின் விலை உயராமல் அப்படியே இருந்தால்தான், கூலி உயர்வு உண்மையில் உயர்வு ஆகும்.

இந்தக் கருத்தை உரைகல்லாக வைத்துக்கொண்டு பார்த்தால், இப்போது தொழிலாளர் பெற்றிருக்கும் கூலி உயர்வை, உயர்வு என்று யாருமே கூறமுடியாது: தொழிலாளர்களின் கூலி உயர்ந்திருப்பதைவிட, பண்டங்கள் விலை மிக மிக உயர்ந்து போய்விட்டது, விலை ஏற்றம் கூலி உயர்வை வெறும் கேலிக்கூத்தாக்கிவிட்டது.

விலை உயர்வை அடியோடு மறைத்துவிட்டு, கூலி உயர்ந்துவிட்டது—ஆகவே தொழிலாளரின் வாழ்க்கை உயர்ந்து விட்டது என்று ஆச்சாரியார் அவர்கள் பேசுவது கண்டு யாரும் ஏமாந்துவிடமாட்டார்கள்.

தொழிலாளரின் வாழ்க்கை உயர்ந்துவிட்டது என்பதும் உண்மையல்ல.

அந்த 'உயர்வு' ஏற்பட்ட காரணத்தால் முதலாளிகளின் இலா

(11-ம் பக்கம் பார்க்க)

# நாடும் ஏடும்

## இங்கல்ல! மேல் நாட்டில்!

"எனக்குத் தரப்படும் வேலையோ மிகவும் கொஞ்சம்! ஆனால் அதற்கு நான் பெறுகிற சம்பளமோ மிகவும் அதிகம்! அக்கிரமமான அதிகச் சம்பளம்! ஆகவே நான் வேலையை விட்டு விலகி விட்டேன். சின்னஞ்சிறு வேலை செய்துவிட்டு கொள்ளைச் சம்பளம் வாங்கிக் கொண்டு அநியாயமாக மக்கள் பணத்தை வீணாக்க நான் விரும்பவில்லை."-இப்படித் தான் கூறினார் அந்த மாது, ஏனம்மா நீ திடீரென்று வேலையைவிட்டு விலகிவிட்டாய் என்று பிறர் கேட்டபோது! அந்த அம்மையாருக்கு வயது அதிகம் ஆகிவிட்டிருக்கும்—முதுமை நெருங்கிவிட்டிருக்கும் - ஆகவே தான் சலிப்பு பிறந்து வேலையை விட்டு விட்டிருப்பார்கள் என்று கூறுவதற்குமில்லை. அம்மையார் வேலையை விட்டு விலகியபோது அவர்கட்கு வயது 31தான். அம்மையார் உணவுப் பங்கீட்டு அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்கள்—வாங்கும் சம்பளம் செய்யும் வேலையை விட மிக மிக அதிகம் என்பதைக் கண்டார்கள் — இந்த நிலையை நீடிக்கவிடுவது, தான், தன் நாட்டு மக்களின் பொதுப் பணத்தைச் சுரண்டுவதாகவே பொருள்படும் என்று எண்ணினார்கள்—வேலையை விட்டு நீங்கினார்கள். இந்த அரிய நிகழ்ச்சி எந்த ஊரில் நடந்தது என்று கேட்கிறீர்களா? இந்த நாட்டில் அல்ல, பிரஞ்சு நாட்டில் நடந்த நிகழ்ச்சி இது! அடே அப்பா! இங்கேயாவது, இப்படி நடப்பதாவது! இங்கேதான் ஆளவந்தார்களின் உற்றார் உறவினர்களுக்கு வேலை தருவதற்காக தேவையே இல்லாத பதவிகள் புதிது புதிதாக உற்பத்தி செய்யப்படுகின்றனவே!! இலட்சக்கணக்கில் பணம் சம்பாதித்திருந்தாலும் மேலும் மேலும் பசையுள்ள புதிய பதவிகளைத் தேடும் இடம் தேடிகள் அல்லவா ஏராளம் இங்கு! செச்சே, அப்படியெல்லாம் ஏமாளித்தனமாக நடந்து விடமாட்டார்கள் இந்த நாட்டுப் "பெரிய மனிதர்கள்'! வேலையை உதறித் தள்ளிய அம்மையார் பிரஞ்சு நாட்டு மாது, பெயர் ரோஸ்கிசரோவல், வேலையை விட்டு நீங்கியது சென்ற மாதம்.

## செலவுதான் பெருகிற்று! உணவு பெருகவில்லை!

உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்-திக்கெட்டும் விவசாயம் தொடங்குங்கள்என்று ஓயாமல் முழக்கமிடுகிறார்கள் அல்லவா ஊராள வந்தவர்கள், இந்த வீர முழக்கத்திற்கு அதாவது அதிக உணவு உற்பத்தி இயக்கத்திற்கு இந்த மூன்றாண்டு காலத்தில் இந்தியசர்க்கார் செலவிட்டுள்ள தொகை—கேட்டால் திகைப்பீர்கள்—மொத்தம் 35 கோடி —ஆமாம், முழுசாக 35 கோடி! ஓஹோ இவ்வளவு பெருந்தொகையா செலவிட்டிருக்கிறார்கள் ஆட்சியாளர்கள், அப்படியானால் உணவு உற்பத்தி நிச்சயம் பெருகித்தான் இருக்கும்என்று நாட்டு மக்கள் எதிர்பார்ப்பர். ஆனால் நடந்தது என்ன தெரியுமோ? உணவு உற்பத்தி மூன்று ஆண்டுகட்குமுன் இருந்ததை விட, இப்போது, 35 கோடி செலவிட்டபிறகு, பெருத்த அளவுக்குக் குறைந்துபோய் இருக்கிறது! எப்படி நம் ஆளவந்தார்களின் திறமை! அபாரம் அபாரம் என்கிறீர்களா, ஆமாம்! பிரமாதம், பிரமாதம்! 35 கோடி ரூபாய் செலவு செய்து உணவு உற்பத்தியைக் குறைப்பது என்றால், இந்த அற்புதமான சாதனையை ஜவஹர் சர்க்காரால் தவிர வேறு யாரால் செய்துகாட்ட முடியும்? அடா, அடா, நம் ராமராஜ்யத்தின் பெருமையே பெருமை! இந்த பாரத புத்திரர்களின் ஆற்றலே ஆற்றல்!

## என்ன ஆகிறது இந்தப் பணம்!

1948—49-ம் ஆண்டுகளில் டில்லி சர்க்கார் ஒரு புறம் காஷ்மீர் போராட்டத்திலும், மற்றொரு புறம் ஹைதராபாத் யுத்தகளத்திலும் ஈடுபட வேண்டியிருந்ததால், அந்த ஆண்டு சர்க்காரின் மொத்த வருமானத்தில் கிட்டத்தட்ட பாதிப் பங்கு இராணுவ செலவுக்கே ஒதுக்க வேண்டி ஏற்பட்டது. அது நியாயம். ஆனால் இந்த ஆண்டு ஹைதராபாத் சண்டையுமில்லை. காஷ்மீர் போராட்டமுமில்லை. என்றாலும் இந்த ஆண்டுகூட மொத்த வருவாயில் 100-க்கு 47 பங்கு இராணுவச் செலவுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதே, இது ஏன்? சண்டைக் காலத்தில் செலவான அதே அளவு சமாதான காலத்திலும் இராணுவத்திற்குச் செலவாகிறது என்றால் சண்டைக்கும் சமாதானத்திற்கும் என்னதான் வேறுபாடு? விளக்குவார்களா டில்லிபுரி ஆண்டவர்கள்?

## பண்டித ஜவஹர் முன்னேறுகிறார்!

மூன்று மாதங்கட்கு முன்னர், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் பண்டித நேரு, இன்னும் இரண்டு அல்லது

[11-ம்-பக்கம் பார்க்க]

★ போர்வாள்! ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 புரட்டாசி 21
8—10—49 சனிக்கிழமை

# ராஜாஜி வெண்பா!

★

## முதலடியே தவறு!

★

"இதோ பாரப்பா, இந்த சித்திரத்தைப் பார்! இந்த எழில் ததும்பும் ஓவியத்தை சுவைததும்ப வரைந்திருக்கும் கலை ததும்பும் உருவம் படைத்த ஓவியப் புலவனின் உயர் திறமையைப் பார்! அவன் வரைந்திருக்கும் இளநங்கையின் உருவத்தில் குதித்தோடும் கலையின் எழிலை, இன்பத்தை, சிறப்பை, சீலத்தைப் பார்! இடை அசைய, இடையில் ஏந்தியிருக்கும் குடம் அசைய, குடத்தில் ததும்பி நிற்கும் நீர் அசைய, ஒரு மங்கை நல்லாள் மயிலென அசைந்துசெல்லும் அழகு நிலையை என்ன அற்புதமாகச் சித்தரித்திருக்கிறான் பார்! முகத்தைப் பார்—முழுநிலவையும் தோற்கடிக்கும் எழில் அங்கு மின்னுவதைப் பார்! கண்களைப் பார்—மின்னலைவிட அதிக பிரகாசமான ஒளி அவற்றில் தெறிப்பதைப் பார்! அந்தச் சிவந்த அதரங்களைப் பார் — பளபளப்பான கன்னங்களைப் பார் — வில் போல வளைந்திருக்கும் புருவங்களைப் பார்......பாரப்பா, ஓவியனின் கைவண்ணம் எத்தகையது என்பதைப் பார்...."

"என்னய்யா இது மூச்சுக்கூட விடாமல் பேசிக்கொண்டேயிருக்கிறீர்! நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்டுவிட்டுப் பிறகு பேசும் ஐயா......"

"இரப்பா இரு! பிறகு பேசுவாய் நீ! முதலில் இந்த இன்ப ஓவியத்தின் எழிலைப் பருகு! இந்த இள மங்கையின் தோற்றத்தைக் காணு! இந்த உல்லாசியின் விரல் அசைவில், கண் இமையில், உதட்டோரத்தில் அழகுத்தெய்வம் குடிகொண்டிருக்கிற அற்புதத்தைப் பாரு!......"

"ஐயா நில்லும்! என் வார்த்தையைக் கொஞ்சம் கேளும்! பிறகு பேசும்!"

"என்னப்பா நீ குறுக்கே குறுக்கே பேசிக்கொண்டிருக்கிறாய்! உனக்கு இந்த ஓவியத்தின் பேரழகைக் காண விருப்பமில்லையா! இந்த ஓவியத்தைத் தீட்டியவனின் புலமையைப் பார்த்து ரசிக்க நேரமில்லையா! சித்திரக் கலையின் அற்புத சிருஷ்டியாகிய இந்தப் படத்தோடு உன் உள்ளத்தைப் பேசவிட உனக்குத் தோன்றவில்லையா, என்னப்பா சேதி?"

"ஐயா, இதைக் கேளுமையா! ஓவியத்தின் உன்னதத்தை நீர் கூறக் கூற, சேயிழையின் சிறப்பை நீர் எடுத்துச் சொல்லச் சொல்ல எனக்கு மனவேதனைதான் அதிகமாகிறது, வெறும் கண்ணீரைத்தான் சொரிய முடிகிறது நான்!......"

"ஏனப்பா அப்படி!"

"அதைத்தான் நான் சொல்ல வந்தேன் முதலிலேயே, நீர் கேட்கவில்லை, ஓவியத்தின் உயர்வை எடுத்துச் சொல்வதிலேயே உம் சிந்தையை நீளச் செலுத்திவிட்டீர், என் சொற்களை கேட்கக்கூட மறுத்து விட்டீர்......"

"அடடே, ஓவியத்தைப் பாராட்டும் என் உற்சாகத்தில் உன் சொற்களை நான் காதிலே ஏற்றுக்கொள்ளாமலே போய்விட்டேன்...நான் கவனிக்கவில்லையப்பா......ஆமாம், சித்திரத்தின் சிறப்பை நான் சித்தரிக்கும்போது உனக்கு வேதனைதான் பிறக்கிறது என்றாயே, ஏன் அப்படி?"

"வேதனை பிறக்காமல் இன்பமா அரும்பும் என் மனதில்! நான்தான் குருடனாயிற்றே! பார்வை இழந்த 'பாவி' ஆயிற்றே! காணத் தெரியாத 'கசடன்' ஆயிற்றே! சித்திரம் எப்படியிருந்தால்தான் எனக்கென்ன தெரியப் போகிறது! பார்வையே அற்ற என்னைப் பார்த்து, பார்—பார்—இந்த ஓவியத்தைப் பார்—வில் புருவத்தைப் பார்-கண்ணாடிக் கன்னத்தைப் பார்—நீரசையும் குடத்தைப் பார் என்றெல்லாம் கூறினால் என் மனம் உருகாதா, வேதனை, என் உள்ளத்தை அரித்துத் தின்னாதா, துக்கம் துளைக்காதா என் நெஞ்சத்தை, கூறுமையா ரசிகமணியே நீரே கூறும்!"

"இதற்கா இப்படி வருந்துகிறாய்! சே! சுத்த பைத்தியக்காரனப்பா நீ! எனக்கென்ன கண்ணில்லையா உன் கண்கள் காணும் சக்தியை இழந்தவை என்பதைக் காணாமல் இருக்க! நீ பார்வையை இழந்தவன் என்பது எனக்குத் தெரியும்! மிக நன்றாகத் தெரியும்..."

"தெரிந்துமா இச் சித்திரத்தின் சிறப்பைப்பற்றி, செந்தமிழில், சிங்கார நடையில் என்னிடம் செப்பவந்தீர்! என்ன கல்நெஞ்சமய்யா உமக்கு! ஈவு இரக்கம் என்பதே உமக்குக் கிடையாதா! பரிவு பச்சாத்தாபம் முதலியவற்றிற்கும் உமக்கும் நெடுந்தூரமா! கனிவு கருணை முதலிய நற்பண்புகள் உம் உள்ளத்தை எட்டிப் பார்ப்பதும் இல்லையா! உள்ளம் என்ன இரும்பா உமக்கு! ஒரு குருடனைப் பார்த்து இந்த ஓவியத்தை நுணுக்கமாகக் கண்டு களிப்புறு என்று கூறுவது எவ்வளவு பெருங் கொடுமை என்பதை அறியீரா! அல்லது அறிந்தும்தான் இந்த ஈரமற்ற செயலை ஆற்ற முனைந்தீரா! யாரையா நீர் பாலைவன உள்ளம் வாய்ந்த பாகு மொழியாளர்! வெட்கமில்லையா உமக்கு குருடனைப் பார்த்து இதுபோலக் கேலி பேச!"

"என்னப்பா இது, ஒரு சொற்பொழிவே செய்யத் தொடங்கிவிட்டாய்! நீ குருடனாயிருப்பதால் தானே உன்னை அழைத்தேன் ஓவியத்தைக் காண! இது தெரியாமல் நீ வசைமொழி அந்தாதியே தய

ரிக்கத் தொடங்கிவிட்டாயே, நியாயமா இது!"

"வெந்த புண்ணில் வேலை நுழைக்காதீர்! குருடன் — ஆகவே தான் சித்திரத்தைக் கண்டு களிப்புற வருகவென அழைத்தேன்— என்ன வாசகமய்யா இது! உரக்கச் சொல்லிவிட்டாதீர், யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது இந்த விவேக சிந்தாமணி! கைகொட்டி நகைத்துவிடப் போகிறார்கள்! கொஞ்சம் மெள்ளவே பேசும்!"

"அட சரிதான் சும்மா இரப்பா! யார் காதில் விழுந்தால்தான் என்னவாம்! பார்வை உள்ளவர்கள் அத்தனைபேரும்தான் இந்த சித்திரத்தைக் கண்டு களிக்க மறுத்துவிட்டார்களே! இனி, குருடர்களைத் தானே அழைக்க வேண்டும் சித்திரத்தைக் காட்ட! வேறு யாரை அழைப்பது நீ தான் சொல்லேன்! பார்வை உள்ளவர்களையெல்லாம் தான் நான் விரோதித்துக்கொண்டு விட்டேன்—அவர்கள் இனி எப்படி வருவார்கள் இந்த சித்திரத்தைக் காண, 'கண்டு மகிழ, மகிழ்ந்து இதைக் காப்பாற்ற—இனி உன் பொறுப்புதானே இச் சித்திரத்தைக் காண்பதும் கண்டு 'மகிழ்வதும்! நீயும் மறுத்துவிட்டால் பிறகு யார்தான் இச்சித்திரத்தைக் காண்பதாம்! யாராவது ஒருவர் வேண்டாமோ இதைக்காணவும் மகிழவும் காப்பாற்றவும்! ஏனப்பா பேசாமல் இருக்கிறாய், பார் சித்திரத்தை! பார்த்துப் பூரிப்பு அடைந்திடு! மகிழ்ச்சி கொண்டிடு! ஆநந்தக் கடலில் மூழ்கித் திளைத்திடு! ஆமாம், நிஜமாகத்தான் சொல்கிறேன், நீ கண்டு களிக்கத்தான் வேண்டும். இந்த இன்ப ஓவியத்தை! நீ கண்ணிலி என்பது எனக்குத் தெரியும் தெரிந்துதான் கூறுகிறேன்! வா, வா, வந்து பார்த்து மகிழ்ச்சியடை!"

* * *

எங்கே நடந்தது இந்த உரையாடல், குருடனை ஓவியத்தின் நுணுக்கங்களைக் காண அழைத்த பேரறிவாளர் யார்—எந்த ஊர்—என்ன பேர் என்றெல்லாம் கேட்கத் தோன்றும் கண்பர்கட்கு! இந்த உரையாடல் எங்கே நடந்தால்தானென்ன, கண்ணிலானைக் கண்டு காண்க சித்திரத்தை என்றுரைத்த கண்ணியவானும் யாராய் இருந்தால்தான் என்ன, அவை அல்ல முக்கியம் இதுபோது, இந்த வாரம், கண்ணன் காட்டிய வழியார், டில்லிமாநகரில், விஜயதசமியன்று விளம்பியுள்ள வாசகங்கள், இந்த உரையாடலை, எங்கிருந்தோ இழுத்துவந்து நம் மனக்கண் முன் நிறுத்தியிருக்கின்றன. அந்த "மணி மொழிகள்" இந்த உரையாடலை. நினைப்பூட்டும் திறமுடையனவாய் இருக்கின்றன! ஆம்; அதுதான் இங்கே கவனித்தற்குரிய பொருள்!

கண்ணன் காட்டிய வழியார், கலியுக ஜனகர், கருப்புக் கண்ணாடிக்காரர், மாம்பலத்து மாவீரர், தென்னாட்டு மூளை, தியாகபுரியின் தலைவர், அன்றோர் நாள் தமிழர்களை அறப்போருக்கு அழைத்தவர் என்றெல்லாம் பலரால், பலவிதமாக அழைக்கப்பட்டும் பெருமையும் சிறப்பும் படைத்த இந்தியாவின் கவர்னர் ஜெனரல் — நமது மதிப்பிற்குரிய முன்னாள் முதலமைச்சர்—கல்கி கோஷ்டியின் ஞானாசிரியர் — முப்புரியினரின் முதுபெருந்தலைவர்—அன்பர் ஆச்சாரியார் ஆறேழு நாட்களுக்கு முன்னர் பேசியிருக்கிறார்! பேசியிருக்கிறார் என்றால் சாதாரண ஆச்சாரியராக இருந்துகொண்டல்ல அவர் பேசியிருப்பது! மேன்மை தங்கிய கவர்னர் ஜெனரல் என்ற உயர்ந்த பீடத்தில் வீற்றிருக்கும் விருதுபெற்றவர் என்ற நிலையிலிருந்துகொண்டு பேசியிருக்கிறார்! சொகுசுபுரியில் வாழும் சீமான்களும் கண்டு பொறாமைப்படக்கூடிய அளவு பிரம்மாண்டமான விஸ்தீரணமும் படாடோபமும் வாய்ந்த அரண்மனைபோன்ற இடத்தில் வாழும் அதிகார புருஷராக இருந்துகொண்டு பேசியிருக்கிறார்! கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க பட்டாளங்களும் போலீஸ் வரிசைகளும் அலுவல் அதிகாரிகளும் தயாராக நின்றுகொண்டிருக்கும் அளவு அதிகாரம் பெற்றவர் என்ற இமயமலை உச்சியிலிருந்துகொண்டு பேசியிருக்கிறார்! பேசுகிறார் என்றால் பத்திரிகை நிருபர்கள் ஓடோடிவர, கூப்பிடுகிறார் என்றால் பெரியதுரைகள் திரண்டோடிவர, விரல் அசைக்கிறார் என்றால் சர்க்கார் மாளிகை சீமான்கள் தடதடவென்று விரைந்து வர, பார்க்க நினைத்தார் என்றால் ஆளவந்தார்கள் ஏனென்று கேட்டுவர, வெளியே வருகிறார் என்றால் கேமிராக்கள் திக்கெட்டிலிருந்தும் 'கிளிக் கிளிக்' போட, அவர் பார்வை தங்கள்மீது விழாதா, அவர் நோக்கு தங்கள் திக்குக்கு வராதா என்றெல்லாம் பலர் ஏங்கி நிற்க; இத்தகு பெருநிலையிலிருக்கும் பூமானாக இருந்து கொண்டு பேசியிருக்கிறார்.

பேசியிருக்கிறார்—அந்தப் பேச்சு காற்றிலே மிதந்துவரும் கீதமாக வானொலியிலே மிதந்து மிதந்து நாடெங்கும் அலைபோல பாய்ந்துமிருக்கிறது—ஏடுகளில் எல்லாம் 'பேச்சு' பக்கம் பக்கமாகப் பிரசுரம் ஆகியும் இருக்கிறது:

பேசியிருப்பவரோ கவர்னர் ஜெனரல் — கவர்னர் ஜெனரல் என்றாலோ இந்த இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகப் பெரிய அதிகாரி, மிக மிகப் பெரிய அதிகாரி என்று பொருள்—எனவே ஆச்சாரியார் அவர்களின் பேச்சிலே நிறைந்திருக்கும் சொற்கள் அத்தனையும் பொறுப்பும் அதிகாரமும் வாய்ந்தவை, நாட்டு நலனிலே அக்கறை உடைய ஒவ்வொருவராலும் மிக மிகக் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை.

"அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவும், அரசாங்கத்தை நடத்திச் செல்வதற்காகவும் உள்நாட்டுக் குழப்பங்களிலிருந்தும் வெளிநாட்டு ஆபத்துகளிலிருந்தும் நாட்டைக்காப்பாற்றுவதற்காகவும் இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டின் சர்க்காருக்கு, பணம், ஏராளமாகத் தேவைப்படுகிறது என்றால் அது இயற்கைதானே" என்று தன் சொற்பொழிவைத் தொடங்குகிறார் அன்பர் ஆச்சாரியார். உண்மை! பெரும் பணம் தேவைப்படத்தான் செய்யும் அரசாங்கத்தை நடத்திச் செல்ல! அதிலும், இந்தியா, ஆச்சாரியார் அவர்கள் குறிப்பிடுவதுபோல ஒரு பெரிய **நாடு** அல்ல, ஒரு பெரிய **துணைக்கண்டம்**, எனவே இவ்வளவு பெரிய துணைக்கண்டத்தை ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் ஒரு சர்க்காருக்குப் பணம் ஏராளமாகத் தேவையாகத்தான் இருக்கும்.

பணம் ஏராளமாகத் தேவையாக இருக்கும் என்பது பொது விதி. அதனை எவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் இப்போதிருக்கும் இந்திய சர்க்கார் தங்கள் நிர்வாகத்தை

நடத்திச் செல்வதற்காகச் செலவிடுகிறார்களே மிக மிக ஏராளமான பெருந்தொகை—இவ்வளவு இமயமலைச் செலவும் நியாயம்தான் என்பதாக நியாயபுத்தியுள்ள யாருமே கூறமுடியாது. விளாங்காய் அளவு விஸ்தீரணமும் நெல்லிக்காய் அளவு வருமானமுமுள்ள சிறுசிறு நாடுகளுக்கெல்லாம் கூட இந்தியாவின் பிரதிநிதிகள் ஏராளமான சம்பளமும் பெருந்தொகைச் செலவில் அலுவலகமும் உடையவர்களாய் அனுப்பப்பட்டிருக்கிறார்களே—இது வெறும் தண்டச் செலவு என்பதை யார் மறுக்கமுடியும்? செல்வாக்கும் சிறப்புமுள்ள பெரிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பிரதிநிதிகள் கூட இப்போது பெறுவதைப்போல மகாராஜா சம்பளமும், இப்போதுவாழ்வதைப்போல குட்டிக்குபேர வாழ்வும் (சர்க்கார் செலவில்) பெற்று வாழ்வதுதான் முறை என்று யார் இயம்ப முடியும்? டில்லி சர்க்கார் அலுவலகங்களும் இப்போது இருப்பதைப் போல இவ்வளவு பெருத்துப்போய் இருப்பதுதான் அறம் என்று யார் ஒப்புக் கொள்ளக் கூடும்? கவர்னர் ஜெனரல் சம்பளமும் அமைச்சர்கள் ஊதியமும் படிச்செலவும் பிறவும் இன்று போல பிறர் கண்டு திகைக்கத் தக்க அளவு அதிகமாக இருப்பதுதான் சரி என்று யார் சொல்ல முடியும்? விருந்துகளுக்கும் வீண் கேளிக்கைகளுக்கும் இந்திய சர்க்கார் இப்போது செலவிட்டு வருவது போல கோடிக்கணக்கில் செலவிடுவதைக்கண்டு மனம் பதறாதவர்கள் தான் எப்படி நேர்மையாளராக இருத்தல் கூடும்? எனவே இப்போது இந்திய சர்க்கார் செலவிட்டு வரும் அளவுக்கு பணம் செலவாக வேண்டியது நியாயம்தான் என்பதாக ஆச்சாரியார் அவர்கள் கருதுவாரானால் அது முற்றிலும் தவறு. இதிலே பெரும் பகுதி விலக்கப்படக்கூடிய வீண் செலவுகளே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை, ஆனால் இப்படி வீண் செலவு செய்யாமல், கேளிக்கைகள் நடத்தாமல், பிறர் பார்த்து மெச்சுவதற்காக பெருந்தொகைகளை வீணுக்கு வாரி இறைத்துப் பாழாக்காமல் இருந்தாலும் கூட நியாயமான, தேவையான, கட்டாயம் செய்தே தீரவேண்டிய, செலவுகள் மட்டும் செய்தாலும் கூட, அந்தச் செலவுத் தொகையேகூட பெருந் தொகையாகத்தான் இருக்கும்.

இந்தத் தொகையை எவ்வண்ணம் ஈட்டுவது? இதோ ஆச்சாரியார் பேசுகிறார் கேளுங்கள் :—

"இதற்கெல்லாம் யாராவது சிலர் பணம் கொடுத்துத்தான் ஆகவேண்டும். முன்னரெல்லாம் பணக்காரர்கள் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அப்போது மகிழ்ச்சியுடன் இருந்தார்கள். எனவே கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது நாம் அவர்களுக்கு வருத்தத்தை உண்டாக்கி விட்டோம். எனவே இனி ஏழை மக்கள் தான் பணம் தந்தாக வேண்டும். சர்க்காரை நடத்திச் செல்வதற்கான பாரத்தை—பெரும் செலவை—இனி ஏழைகள் தான் தாங்கியாக வேண்டும்."

டாடா அல்ல, பிர்லா அல்ல, டால்மியா அல்ல, தலால் அல்ல, சர் அழகப்பா அல்ல, சர் சண்முகம் அல்ல பேசியிருப்பது, ஆச்சாரியார்! ஏழை பங்காளர் என்று ஏத்தி ஏத்தித் தொழப்பட்ட ஆச்சாரியார்! தரித்திர நாராயணர்களின் தோழர் என்று பாராட்டு மாலை பல சூட்டப்பட்டு பதிகம் பல பாடி வாழ்த்தப்பட்ட ஆச்சாரியார்! மக்கள் தலைவர்—மக்கள் தோழர்—மக்களின் நண்பர் என்றெல்லாம் சித்தரிக்கப்பட்ட ஆச்சாரியார்! அவர்தான், அவரேதான் பேசியிருக்கிறார். ஆனால் குரல்மட்டும் அவருடையதல்ல—டாடா, பிர்லா, டால்மியாக்களினுடையது! அழகப்பா—சர் சண்முகம்—சர் குமாரராஜாக்களுடையது!

**"சர்க்காரை நடத்திச் செல்வதற்குத் தேவையான பெருந்தொகையை ஏழைகள்தான் தந்தாக வேண்டும்! பணக்காரர்களால் தரமுடியாது! அவர்கள் மனம் வேதனைக்காளாகி விட்டது."** ஆச்சாரியார் பேசியிருக்கிறார் இதுபோல! அதுவும் சாதாரண ராஜகோபாலாச்சாரியாராக அல்ல! கவர்னர் ஜெனரல் என்ற பொறுப்புள்ள பதவியில் வீற்றிருக்கும் மே. த. ஆச்சாரியாராக இருந்துகொண்டு பேசியிருக்கிறார்! சர்க்காரின் தலைவராக இருந்து கொண்டு பேசியிருக்கிறார்! ஆட்சியாளர்களின் மனச்சாட்சியாக, குரலாக, ஒலிபெருக்கியாக இருந்து கொண்டு பேசியிருக்கிறார்! எவ்வளவு வேதனைதரும் சம்பவம்! இந்த சமதர்ம சகாப்தத்தில் பிர்லாக்கள்கூட துணிந்து, வெளிப்படையாக, இதுபோல முதலாளித்துவ முகாரி பாடமாட்டார்கள்! ஆனால் பாடியிருக்கிறார் அன்பர் ஆச்சாரியார். கொடுமை! கொடுமை! மிகப்பெருங் கொடுமை இது!

ஏழை என்ற சொல்லுக்கே பொருள், பணம் இல்லாதவன் என்பது! உண்ண, உடுக்க, தக்க வீட்டில் இருக்க, குடும்பத்தை வளர்க்க, வீட்டாரைப் பாதுகாக்கப் போதுமான பணம்கூட இல்லாதவன் என்பது! பணக்காரன் என்றால் அதற்குப் பொருள் தன் தேவைக்கு மேல் ஏராளமாகப் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டிருப்பவன் என்பது!

தன் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கே பணமின்றித் தவிக்கும் ஏழையைப் பார்த்து நீதானப்பா சர்க்காரை நடத்துதற்குத் தேவையான பெரும் பணமும் தந்தாக வேண்டும் என்று கூறிவிட்டு தன் தேவைக்காக அல்ல—வெறும் பண ஆசைக்காக—அதிகார பலத்திற்காக— செல்வாக்குக்காக— ஏராளமாகப் பணத்தை முடக்கி வைத்துக் கொண்டிருக்கும் முதலாளிக் குழுவினரைப் பார்த்து உங்கள் மனம் நொந்து கிடக்கிறது—நீங்கள் பணம் தரத் தேவையில்லை என்று கூறுகிறார் கவர்னர் ஜெனரல்!

அநீதியே! உன் பெயர்தான் ஆச்சாரியார் சொற்பொழிவு என்று சொன்னால் அதில் அதிகத் தவறு இருக்கமுடியாது.

நாம் தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ள உரையாடலில், குருடனைக் கூவி அழைத்து, பாரப்பா ஓவியத்தை—பாரப்பா நங்கையின் நல்லழகை — பாரப்பா ஓவியனின் கைத்திறத்தை என்றெல்லாம் கூறினானே பெருமதியாளன் ஒருவன், அது போலத்தான் இருக்கிறது அன்பர் ஆச்சாரியார் ஏழைகளைப் பார்த்து நீங்கள்தான் சர்க்காரை நடத்தப் பணம்கொடுத்தாக வேண்டும் என்று கூறுவதும்!

குருடன்—பார்க்க முடியாது!

ஏழை—பணம்தர முடியாது!

குருடன்—ஓவியத்தைக் கண்டு, அதில் மின்னும் கலையழகைக் கண்டு ரசிக்க முடியாது, அதற்குத்

தேவையான பார்வைச் சக்தி அவனிடம் இல்லாத காரணத்தால்!

ஏழை — சர்க்காரை நடத்தத் தேவைப்படும் பெரும்பணத்தைத் தந்துதவ முடியாது, அவனுக்குத் தேவையான உணவு உடை வசதிகளைத் தேடிக் கொள்ளக்கூட அவனிடம் பணம் இல்லாக் காரணத்தால்!

ஊரையாடலிலே வரும் குருடன் நிலையிலேதான் இருக்கின்றனர் ஏழை மக்கள். குருடனை ஓவியத்தின் சிறப்பைக் கண்டு களித்திடு என்று வற்புறுத்திய அறிஞர் திலகத்தின் நிலையிலே ஆச்சாரியாரும் ஓவியத்தின் நிலையிலே சர்க்காரும் இருக்கின்றனர்.

குருடன் என்பதைத் தெரிந்தேதான் சித்திரத்தைப் பார்த்துச் சுவைக்க அழைக்கிறேன் என்றான் பெருமதியாளன்.

ஏழை என்பதை அறிந்தேதான், அவர்களின் வாழ்விலே வறுமைத் தேள் கொட்டியபடி இருக்கிறது என்பதைத் தெரிந்தேதான் சர்க்கார் பாரத்தைச் சுமக்க அவர்களை அழைக்கிறேன் என்கிறார் கவர்னர் ஜெனரல்.

படத்தைப் பார்த்து ரசிக்கத் தெரிந்த, ரசிக்கும் திறமையுள்ள, பார்வைச் சக்தியுள்ளவர்கள் ரசிக்க மறுத்து விட்டார்கள்! எனவேதான் குருடனை அழைக்கிறேன் என்றான் பெருமதியாளன்.

சர்க்காரை நடத்தும் பாரத்தைத் தாங்கும் சக்தியுள்ள முதலாளிகள் அந்தப் பொறுப்பேற்க மறுத்து விட்டார்கள்—அவர்கள் இனி முன்வர மாட்டார்கள்—ஆகவே ஏழைகள்தான் முன்வந்தாக வேண்டும் என்கிறார் கவர்னர் ஜெனரல்.

வேடிக்கை ஒரு புறம்! விபரீதம் மற்றோர் புறம்! வேதனை வேறு ஒரு புறம்! மூன்று உணர்ச்சிகளையும் ஒருங்கே எழுப்பும் சொற்பொழிவு, கவர்னர் ஜெனரல் ஆற்றியிருப்பது!

பணக்காரர்கள் மனம் புண்ணாகி விட்டதாம்! கூறுகிறார் ஆச்சாரியார் சோகத்தோடு! ஏனோ அவர்கள் மனம் புண்ணாகி விட்டது பாவம்! அவர்கள் சொத்து சுகங்கள் என்ன நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவுடமை ஆகிவிட்டனவா—இல்லை! அவர்களுடைய தொழிற்சாலைகளும் மாடமாளிகைகளும் ஏழை எளியவர்களுக்குத் தரப்பட்டு விட்டனவா சர்க்காரால்—இல்லை! நாட்டிலே என்ன பொதுவுடமை ஆட்சி பூத்து, சமதர்ம மணம் கமழத் தொடங்கிவிட்டதா, ஏழை பணக்காரன் என்ற பேதம் அகன்றுவிட்டதா, உழைத்து உழைத்து உருமாறிச் சாக ஒரு கூட்டமும் உழைப்பது என்பதன் பொருளையே அறியாமல் உல்லாசபுரியினராக வாழ மற்றோர் கூட்டமும் இருக்கும் விபரீதச் சமுதாய அமைப்பு மாண்டுமடிந்துவிட்டதா? இல்லை இல்லை! அப்படியெல்லாம் ஒன்றும் நடந்து விடவில்லை! நாட்டின் பொருளாதார இயந்திரத்தை ஓட்டுவிக்கும் உரிமை பிர்லாக்களிடம்தான் இருக்கிறது—இன்றும்! இன்னமும்! சமுதாயத்தின் சொத்துக்கள் முழுவதும் கைப்பிடியளவுள்ள ஒரு சிலரின் சொத்துக்களாகத்தான் உள்ளன — இன்றும், இன்னமும்! டால்மியாக்கள் பிர்லாக்கள் டாடாக்கள் கிழித்த கோட்டைத் தாண்ட முடியாத நிலையிலேதான் இருக்கிறது டில்லி சர்க்கார்—இந்த விநாடிவரை! 10 ஆண்டு காலத்திற்கு தனி மனிதர்களின் சொந்த சொத்தாக இருக்கும் எந்தத் தொழிலையும் தேசியமயம் ஆக்குவதில்லை என்று இந்திய சர்க்கார், முதலாளிக் கூட்டத்தவர்க்கு எழுதிக் கொடுத்த அடிமை முறிச்சீட்டு அப்படியேதான் இருக்கிறது அப்பு அழுக்கின்றி. இந்திய சமுதாயத்தின்மீது முதலாளித்துவக் கொடி ஜாம் ஜாம் எனப் பறந்தபடிதான் இருக்கிறது. என்றாலும் கூறுகிறார் கவர்னர் ஜெனரல், "அவர்கள்" மனம் புண்ணாகி விட்டது என்று!

அவர்கள் மனம் புண்ணாகி விடத்தக்க செயல் எதனையும் செய்து விடவில்லை இந்திய சர்க்கார்! மாறாக, அவர்கள் மனம் பூரிக்கும் விதத்திலேதான் இவர்கள் நடந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்திய சர்க்கார், சமதர்மப் பாதை இருக்கும் திக்கு நோக்கிக் கூட திரும்பவில்லை.

திரும்பலாம் என்ற எண்ணம் கூட இந்த ஆளவந்தார்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

இத்தகு எண்ணம் இவர்களுக்கு விரைவில் ஏற்படும் என்பதற்கான அறிகுறிகூட எதுவும் தென்படவில்லை.

இந்நிலையில் துள்ளிக் குதித்து ஆநந்தப் பள்ளுப் பாடவேண்டிய நிலையில் இருக்கும் பிர்லாக்களின் மனம் புண்ணாகிவிட்டது என்று ஆச்சாரியாரே கூறினாலும் அதை நாம் நம்பமுடியாது. நாடே நம்பாது. உலகமும் நம்பாது. நல்லறிவாளர்கள் யாருமே நம்பமாட்டார்கள். "அவர்கள்" மனம் புண்ணாக வேண்டிய அவசியம் எதுவுமே ஏற்படவில்லை. காங்கிரஸ் கட்சி பிர்லாக்களின் செல்லப் பிள்ளையாகவும், இந்திய சர்க்கார் காங்கிரஸ் கட்சியின் ஆதீன பீடமாகவும் ஜொலிக்கும் இன்றைய நிலை எத்தனை நாட்கள் நீடிக்குமோ அத்தனை நாட்கள், பிர்லாக்களின் உள்ளம் இன்பபுரிப் பயணம் செய்யுமே தவிர, துக்கம் என்பதன் நிழலும் அவர்கள் மனத்திரை மீது விழாது. விழமுடியாது.

பிர்லாக்கள் மனம் புண்ணாகி விட்டதற்கும் ஏழைகள் மட்டுமே சர்க்காரைத் தாங்கியாக வேண்டிய மகத்தான பளு அவர்கள் மீது சுமத்தப் பட்டிருப்பதற்கும் காரணம் என்னவாம் தெரியுமா? மீண்டும் கவர்னர் ஜெனரல் பேசுகிறார், கேளுங்கள் :—

"வரிசையாக நிறைவேற்றப்பட்ட பல சட்டதிட்டங்களின் பலனாக, இதற்கு முன்னால் நிலச்சுவான்தாரர்கள், மிராஸ்தாரர்கள், மில் சொந்தக்காரர்கள், முதலாளிகள் ஆகியோருக்குச் சென்று கொண்டிருந்த இலாபத்திற் பெரும்பகுதி இப்போது, உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் முறையே அதிக இலாபமாகவும் அதிக சம்பளமாகவும் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே இனி, இந்த ஏழைகள்தான் சர்க்காரை நடத்துவதற்குத் தேவையான அதிகப் பணமும் தந்தாகவேண்டும்."

கேளுங்கள் நண்பர்களே, காது கொடுத்துக் கேளுங்கள்! அன்பர் ஆச்சாரியாரின் அற்புத வாதத்தைக் கேளுங்கள்! கூலி உயர்ந்து போய்விட்டதாம் தொழிலாளர்கட்கு! எனவே இலாபம் குறைந்து விட்டதாம் முதலாளிகட்கு! ஆகவே பணம் இனி தொழிலாளர்களிடமிருந்து தான் வந்தாக வேண்டுமாம்!

வாதம் மிகமிக சாமர்த்தியமான முறையிலேதான் தயாரிக்கப்பட்டி-

[4-ம் பக்கம் பார்க்க]

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் சோகத்தில் ஆழ்ந்துவிட்டார்கள்! நடைப் பிணங்களாக அவர்களாகிவிட்டார்கள்! பரம்பரை பரம்பரையாகப் பாண்டிய மன்னர்களின் புகழையும், வெற்றியையும், ஆட்சிபுரியும் மாட்சிமையையும் புகழ்ந்துவந்த மக்கள்—நாட்டின் செல்வங்கள்—காட்டையும் மேட்டையும் திருத்தி, சாலைகளையும் சோலைகளையும் உண்டாக்கியவர்கள்—மூச்சடக்கி முத்தெடுத்தவர்கள் — வாள் எடுத்து எதிரிகளைத் தாள்பணியச் செய்தவர்கள்—கண்ணீர்விட்டு வேதனையோடு பேசவும், தூற்றவும் தொடங்கிவிட்டார்கள்! ஆத்திரத்தால் ஆயுதங்கள் எடுத்தனர்! உள்ளத்தில் நிறைந்திருந்த பாசம் அவர்களைச் சோர்ந்து உட்காரச் செய்துவிட்டது! எனினும் நாட்டு மக்களின் எதிர்ப்பு நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே வந்தது! படைவீரர்கள், தளபதிகள் அனைவரும் தம்தம் பதவிகளை விட்டுவிட்டு வீட்டில் மயக்கம் கொண்டவர்களைப் போல உட்கார்ந்துவிட்டார்கள்! உள்நாட்டுக் குழப்பம் ஏற்படுமோ என்று அஞ்சத் தக்க விதத்தில் நிலைமை வளர்ந்து கொண்டே சென்றது!

அரசன், இப்படியெல்லாமாகுமென்று கனவில்கூட எண்ணவில்லை! ஒரு சிலர்தான் எதிர்ப்பார்கள்—அதிலும் மறைவாகவிருந்து—அந்தப் போக்கிரிகளை, ராஜத்துரோகிகள் என்ற பழிச்சொல் கூறி தண்டித்து அடக்கிவிடலாம் என்று மன்னர் எதிர் பார்த்தார்! ஆனால் எதிர்த்தவர்கள், கண்டித்தவர்கள், வருத்தத்தால் தம்தம் வேலைகளை விட்டுவிட்டு, அரச அலுவல்கள் நடைபெறாமல் ஸ்தம்பிக்கச் செய்தவர்கள், சிலராக இல்லாமல் மிகப் பலராக இருக்கக் கண்டார்! இப் பக்கம் பார்த்தால் மந்திரியைக் காணவில்லை! அப் பக்கம் திரும்பினால் சேனைத் தலைவனைப் பார்க்க முடியவில்லை! அரண்மனைக்குச் சென்றால், அன்பு மகளை, வீரப் புதல்வனைக் காண தைரியம் வரவில்லை! எப்பக்கம் தேடினாலும், நாட்டுக்குத் தொண்டாற்றியவர்களில், நாட்டு மக்களின் உள்ளத்தில் குடியேறியவர்களில், பலமிக்க எதிரிகளையும் சிம்மக் கனவு காணச் செய்தவர்களில், ஒருவர்கூட தம் பக்கம் நிற்க, தமக்கு ஆதரவுதர முன்வரவில்லை! அரசன் உள்ளத்தில் அச்சம் குடியேறியது! எனினும் அச்சம் அவர் உள்ளத்தைத் தீண்டாததைப்போலவும், துக்கம் அவர் நெஞ்சைத் துளைக்காததைப் போலவும் வெளிக்கு வேஷமிட்டுக்கொண்டிருந்தார்!

பெரிய மாளிகை! சுவர்களெல்லாம் பளபளப்பாகவிருக்கின்றன! வண்ணச் சித்திரங்கள் கண்ணைக் கவர்ந்து கருத்தில் பதிகின்றன! தங்கப் பூணிட்ட தூண்கள் கம்பீரமாக நிற்கின்றன, பலகணிகளிலெல்லாம் பட்டுத் திரைகள் காற்றில் அசைந்து கொண்டிருக்கின்றன! தங்கம், மாணிக்கம், முத்து இன்னபிற விலை உயர்ந்த பொருள்கள் ஓர் அறையில் கொட்டிவைக்கப்பட்டுக் கிடக்கின்றன! இவ்வளவு அழகும் செல்வமும் மிகுந்திருந்தாலும் அந்த மாளிகையில் விடாத துர்நாற்றம் வீசிக்கொண்டிருக்கிறது! துர்நாற்றத்தைத்துடைத்துவிடலாமென்று மாளிகையில்குடியிருந்தவர்கள் கூறினர். கூடாது என்றான் குடும்பத்தின் தலைவன்! துர்நாற்றத்தில் வாழச்சகிக்காமல் வெளியேறினர்! மாளிகை காலியாயிற்று! கெட்ட வாசனையையே விரும்பும் வௌவால்கள், அந்த மாளிகையில் குடியேறின! தேள்கள் மெல்ல மெல்ல வந்து தங்கின! சுவற்றோரங்களில் பாம்புகள் ஊர்ந்தன! தேரையும் தவளைகளும் தத்தித்தத்தி குதித்து வந்தன! மனிதர்கள் இல்லாததனால், இந்த ஜந்துகள் மாளிகையில் தாராளமாகத் தங்கி வசிக்கத் தொடங்கி விட்டன!

இயற்கையில் துர்நாற்றத்தை விரும்பும் ஜந்துகள் இருப்பதைப் போல, மனிதரிலும் அந்த ஜந்துகள் இருக்கிறார்கள்.

போரில் பின்வாங்கிய கோழைகள், எதிரிகளிடம்கபடமாகப்பேரம் பேசி பொருள்பெற்ற துரோகிகள், ஆற்றலில் நொண்டிகள், அறிவில் குருடர்கள், நீதியின் நேர்மையின் இன்னிசையைக் கேட்டறியாத செவிடர்கள் இன்னபிற மனிதப் பிராணிகள் மன்னரின் பக்கம்வந்து சேர ஆரம்பித்தனர்! அவர்கள் போனால் என்ன, நாங்கள் இல்லையா என்று தைரியம் கூறினர்! உதிர்ந்த துடைப்பத்தையும் இந்த ஆட்களால் சரியாகச் சேர்த்து ஒழுங்காகக் கட்ட முடியாது என்பதை அரசர் நன்கு அறிவார்! எனினும் தனக்கும் சில ஆட்கள் வேண்டுமே, தன் பக்கமும் ஆட்களிருக்கிறார்கள், ஆதரிக்க என்று பிறருக்குக் கூற வேண்டுமே என்ற எண்ணத்தால், அந்தக் கோழைகளை, துரோகிகளை, கபடர்களைச் சேர்த்துக் கொண்டார்!

இந்த நிலையில் இளவரசியின் அண்ணன் என்ன செய்யப்போகிறார் என்பதே எங்களுக்கு விளங்கவில்லை!

ஒருநாள் இரவு நானும் இளவரசியும் காளியின் சிலையின் முன் நின்று கொண்டு நாட்டின் எதிர்காலத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம்! இசையொலியும் எங்கள் அருகேதான் இருந்தாள்! வெளிக்கதவு திறக்கப்படும் சப்தத்தைக் கேட்டதும் நாங்கள் மூவரும் சயன அறையினுள் ஓடி ஒளிந்து கொண்டோம்.

(தொடரும்)


## ருஷ்ய நாட்டு அழகி

**இராதாமணாளன் தீட்டிய அரிய நூல்,**

செந்தமிழ் சிரித்து விளையாடும் இனிய நடை—தேன் ஆறு போன்ற கதைப்போக்கு—இன்பமா, துன்பமா, வீரமா, எல்லா உணர்ச்சிகளும் பின்னிக்கிடந்து எழில் பரப்பும் சிறு கதைகள். மூன்று வர்ண அட்டை. அழகிய பதிப்பு.

**விலை 0 8 0** **தபாலில் 0 9 0**

**பகுத்தறிவுப் பாசறை**

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ம் குறைந்துவிட்டது என்பதும் ண்மையல்ல.

ஆகவே, தொழிலாளர்கள்தான் னி அரசாங்கத்தைத் தாங்குவதற் த் தேவையான பணம் முழுவ ம் தந்தாகவேண்டும் என்று ாதாடுவதும் தவறு. பணக்காரர் ள் மனம் புண்ணுகிவிட்டது— வர்கள் இலாபம் குறைந்து பாய்விட்டது — அவர்கள் இனி திக வரி செலுத்த முடியாது ன்று வாதாடுவதும் முழுத்தவறு.

தொழிலாளர்கள் வாழ்க்கை யர்ந்துபோய் விட்டது என்ற டிப்படை எண்ணமே தவருக ருக்கும் காரணத்தால், அந்த ண்ணம் என்னும் கடைக்கா ன்மீது ஆச்சாரியார் அவர்கள் ழுப்பியுள்ள முதலாளித்துவ வண்பா என்னும் கட்டிடமும் வறுகளின் பிரதிபிம்பமாகவே ளங்குகிறது.

ராஜாஜி வெண்பா—அதன் முத டியே தவறு! முதலடியே தவருக ருக்கும்போது அந்த வெண்பா ன் ஏனைய அடிகளும் தவருக ருப்பதில் என்ன வியப்பிருக் றது?

நாம் முதலிலேயே குறிப்பிட்டது பால, ஆச்சாரியார் அவர்கள், ழையர் கூட்டத்தைப் பார்த்து, நீங்கள்தான் சர்க்கார் இயந்தி த்தை ஓட்டுவதற்குத் தேவை ான பணபலம் முழுவதும் தந் ாகவேண்டும்" என்று கூறுவது, ரு கண்ணிலானைப் பார்த்து ரசிக ணி ஒருவன், இந்த ஓவியத்தின் றப்பைக் கண்டு ரசிக்கக்கூடிய றமை முழுதும் வாய்ந்தவன் ானப்பா என்று கூறுவதைப் பாலத்தான் இருக்கிறது.

"பணக்காரர்களுக்கு மேலும் மேலும் வரி போட்டு அவர்கள் னதைப் புண்ணுக்கி விட்டோம், னி அவர்களுக்கு வரி போடுவ தில்லை எனவேதான் ஏழைக ாய் இருந்தாலும் நீங்களே அதிக ரி செலுத்தியாகவேண்டும் இனி" ன்று ஆச்சாரியார் அவர்கள் றுவதும், ரசிக மணி, குருட னப் பார்த்து, காணக் கண் டைத்தவர்கள் யாரும் இந்த ஓவி த்தை வந்து காண மறுக்கிருர் ள் எனவேதான் உன்னைக் காணச் சொல்கிறேன் நீ குருடன் என்றபோதிலும் என்று புகன் ருனே, அதுபோன்ற விசித்திரக் கருத்தாகத்தான் இருக்கிறது.

எது எப்படியிருந்தாலும் ராஜாஜி வெண்பா, ஓர் உண்மையை நமக்குத் தெள்ளத் தெளிய விளக்குகிறது. அதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தத்தான் வேண்டும்.

அந்த உண்மை, இது:—"இனி, **காங்கிரஸ் சர்க்கார் பணக்காரர்களுக்கு வரி போடப்போவதில்லை. ஏழைகளுக்குத்தான் போடப்போகிருர்கள்.**"

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று ஆண்டுகளில் இந்தியாவின் சகல சங்கடங்களும் தீர்ந்துவிடும் என்று ஆருடம் கணித்தார். இப்போது, இந்த வாரம் புதுடில்லி காந்தி பிறந்த நாள் கூட்டத்தில் பேசுகையில், இன்னும் 10 ஆண்டு காலத்தில் இந்தியாவின் சிக்கல்கள் யாவும் அறுபட்டு சுபிட்ச வாழ்வு மலர்ந்துவிடும் என்று புதுமொழி புகன்றிருக்கிருர் அதே பண்டிதர், அதே குரலில்! இன்னும் சிலநாட்கள் பொறுத்துப்பேசும் போது, இந்தியாவின் குறைகள் யாவும் இன்னும் 20 ஆண்டுக் காலத்தில் தீர்ந்துவிடும் என்று கூறுவார் போலும்! பண்டிதரின் முன்னேற்றம் 2 ஆண்டுக் காலத்திலிருந்து 10 ஆண்டுக் காலத்திற்கு வந்திருக்கிறது! அது 20 ஆண்டுக் காலத்திற்கு எப்போது வருமோ தெரியவில்லை! வாழ்க, பண்டிதரின் முன்னேற்றம், வாழ்க!

## மகா மேதாவி பேசுகிருர்!

"விடுதலை" இதழில் சென்ற வாரம் ஒரு மகா மேதாவி புதிய அமெரிக்கா ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிருர். இந்தத் தென்னுட்டுக் கொலம்பசுக்குக் கட்டாயம் ஒரு நோபல் பரிசாவது கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பது நம் கருத்து. ஏனெனில் அவருடைய அதிதீட்சண்ணிய அறிவு அவ்வளவு விசாலமாகப் பரந்து விரிந்து சிறந்து பொலிந்து பேரொளி வீசித் திகழ்கிறது! திராவிடர் கழகத்தின் தலைமைப் பீடத்தாரின் சர்வாதிகாரப் போக்கைக் கண்டு உள்ளம் கொதித்தெழுந்து ஆயிரமாயிரம் தூய உள்ளத்தவர்கள்-தீரத் தொண்டர்கள் கட்சியை விட்டு வெளியேறி புதிய கழகம் உருவாக்கியிருக்கிருர்கள் அல்லவா, இந்த ஜனநாயகப் பணியை, ஏசுகிறிஸ்துவையும் முகமது நபியையும் புத்தர் பெருமானையும் காட்டிக் கொடுத்த சில தூர்த்தர்களின் துரோகப் பணிக்கு ஒப்பிடுகிருர் அந்த உலக்கைக் கொழுந்து! ஒரு கட்சியின் தலைவர் பாசிசப் பாதையில் நடக்கத் தொடங்குவது கண்டு, கட்சித் தொண்டர்கள், குமுறும் உள்ளத்தவராய், நீதியை — நேர்மையை — உண்மையை—ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக கட்சியை விட்டு கண்ணியமாக வெளியேறுவதற்குப் பெயர் துரோகம் என்கிருர் அந்த விசித்திர 'விடுதலை'யின் விபரீத எழுத்தாளர்! அடடா வோ அடடா! இதற்குப் பெயர் துரோகம் என்றுல், பெரியார் இராமசாமி, 25 ஆண்டுகளுக்கு முன்னுல், காங்கிரஸ் கட்சியில் பார்ப்பனியம் தாண்டவமாடுகிறது என்று சொல்லிக்கொண்டே அதைவிட்டு வெளியேறினாரே, அதுகூட துரோகம் என்ற தலைப்பின் கீழ்தானே இடம்பெறும்! ஆனுல் அதற்குப் பெயர் துரோகம் அல்ல என்றுல் நாம், திராவிடர் கழகத்தைவிட்டு வெளியேறியது மட்டும் எப்படி துரோகம் ஆகிவிடும்? தன் இலட்சியங்கள்

காங்கிரசில் சிதைக்கப்படுகின்றன என்பதை முன்னிட்டுத்தானே பெரியார் காங்கிரசை விட்டு விலகினார்? அதுபோலத்தானே நாமும், பாசிசப் பாதையில் நடக்கத் தொடங்கிவிட்ட தலைவரின் கீழிருந்து பணியாற்றுவதனால் நாட்டில் தழைத்து வரும் பாசிசத்தை ஒழிக்கமுடியாது என்று கருதி அவர் தலைமையில் உள்ள கழகத்தைவிட்டு வெளியேறினோம். இந்த சாதாரண உண்மையைக்கூட உணர்ந்து கொள்ளும் ஆற்றல் அற்ற ஒரு கோமாளி தன் அறிவின்மையை நாட்டுக்கெல்லாம் விளம்பரம் செய்யும் தோரணையில் ஒரு கட்டுரையைத் தீட்டினால் அதையும் 'விடுதலை' வெளியிடுகிறது என்றால் 'விடுதலை'யின் பண்பு எவ்வளவு பழுதுபட்டு விட்டது என்பதற்கோர் அடையாளம் இது என்பதைத் தவிர வேறென்ன நாம் கூறமுடியும்?

---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

களாய், சோக சித்திரங்களாய், வெட்கத்தின் உருவங்களாய் அல்லாமல் வேறெவ்விதம் ஆகமுடியும் அவர்கள்?

வயிற்றுக்கோ உணவில்லை—படிப்போ பூஜ்யம்-வாழ்க்கையோ மிருகங்களின் நிலை—விஞ்ஞான ஒளியோ அவர்களை அண்டவே முடியாதபடி அவர்கள் வாழ்கிறார்கள்—இவர்கள்தான் இந்தியமாதாவின் இன்பச் சேய்கள் என்கிறார் டாக்டர் தாராசந்த். இந்த இழிநிலைபோக இதுவரை என்ன செய்திருக்கின்றனர் இந்திய சர்க்கார்? எத்தனை திட்டம் தீட்டியிருக்கின்றனர்? என்னென்ன பணிகள் புரிந்திருக்கின்றனர்? கூறமுடியுமா? முடியாதே! மக்கள் வாழ்க்கையை வதைத்துவரும் பட்டினியைப் போக்க, பஞ்சத்தை ஒழிகக, வறுமையை மாய்க்க ஏதும் செய்ததில்லையே இந்திய சர்க்கார்!

டாக்டர் தாராசந்தின் சொற்கள் உண்மைக்கு மாறானவை என்றாவது கூறமுடியுமா ஆளவந்தார்களால்! அதுவும் முடியாதே! உண்மை, உண்மை, முற்றிலும் உண்மையாயிற்றே அந்த அதிகாரியின் உரைகள்!

மக்கள் பட்டினியை, அறியாமையை, செத்த வாழ்வை ஒழித்துக்கட்டி எல்லார்க்கும் உணவு, எல்லார்க்கும் கல்வி, எல்லார்க்கும் நல்வாழ்வு என்ற நிலைமையை ஏற்படுத்துவது எங்கள் கடமையல்ல—அவர்கள் பட்டினி கிடந்தால் அதற்கு நாங்களென்ன செய்ய முடியும என்று பேசமுடியுமோ ஆட்சியாளர்களால்! அப்படியும் பேசக் கூடாதே! ஒரு சர்க்காரின் முதல் கடமையே, அந்த சர்க்காரால் ஆளப்படும் மக்கள் உணவு, இருக்க இடம், வாழ நல்வாழ்வு ஆகிய மூன்றும் பெற்றவர்களாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்வதுதான என்பது அரசியல் அரிச்சுவடி ஆயிற்று!

எந்த விதமாகப் பார்த்தாலும் மக்களை இந்த விதமான பாலைவன வாழ்விலே வதையும்படிப் பார்த்துக் கொண்டிருப்பது நியாயம் என்று ஏற்படாதே!

வெட்கம்! அதுதவிர வேறு எந்த விதஉணர்ச்சியும் ஏற்படமுடியாது கோடானு கோடி இந்தியர்கள் "இரண்டு வேளை பட்டினி—ஆடு மாடு போன்ற வாழ்வு" என்ற நிலையிலே இருக்கிறார்கள்—அந்த நிலை போக்க "நம சர்க்கார்" ஏதும் செய்யவில்லை என்பதைக் காணும்போது!

அதுவும், இந்தப் பரிதாபகரமான உண்மையை எடுத்துக் கூறுபவர் சர்க்கார் பிரதிநிதியே என்பதைக் காணும்போது, வெட்கம், அதிகரிக்குமே தவிர குறையாது.

மேலும், இப்படிப்பட்ட நிலையிலேதான் இந்தியா இருக்கிறது என்பதை, டாக்டர் தாராசந்த் எடுத்துக் கூறியிருக்கும் இடம் சென்னையல்ல — டில்லியல்ல — பம்பாயல்ல — கல்கத்தாவல்ல — பூனாவல்ல—ஷோலாப்பூர் அல்ல—பாரிஸ் என்பதைக் காணும்போது,

உலகமன்றத்திலே இந்தப் பட
பிடிப்பு நிகழ்ந்திருக்கிறது என்
பதை எண்ணும்போது, உலகெங்
கணுமுள்ள நாடுகள் அத்தனையி
லிருந்தும் வந்திருக்கும் பிரதிநிதி
கள் முன்னிலையில் "எங்கள் இந்
தியா, இப்படி!" என்னும் முகாரி
வாசிக்கப்பட்டிருக்கிறது என்
பதை நினைக்கும்போது, உண்
மையிலேயே வெட்கம், நம் உள்
ளத்தால் தாங்க முடியாத அளவு
பாரம் உடையதாகவே ஆகிவிடு
கிறது.

என் செய்வது! இந்தவிதமாக
நாடாள்கிறார்கள் இந்த "ஜெற்
றிந்துகள்"! இது தருமா என்று
கேட்டுவிட்டாலோ, அதோ பார்
சிறைச்சாலை என்று பெர்லின்
பதிகம் பாடுகிறார்கள்!

"இந்தியாவே! உன்னைக் கண்ட
துமே கண்கள் கலங்குகின்றன!" என்
றார் கவிஞர் இக்பால் அன்றொரு
நாள். அதுதான் நம் நினைவிற்கு
வருகிறது, இந்த கதர் சட்டை க
தனவான்கள் நாடாளும் நற்சிறப்
பைக் கண்டதும்!

---


## பெண்களைப் பற்றிய புதிய புத்தகங்கள்!

காதல்பித்தன் எழுதியவை:

★

மனைவி எப்படி இருக்கவேண்டும் 0 3 (

காதல் புரிவது எப்படி 0 6 (

விற்பனைக் கழிவு 25% அனுப்பு
செலவு இல்லை. இரண்டு புத்தக
கள் வேண்டுவோர் 9 அ
ஸ்டாம்பு அனுப்பவும்.

கிடைக்குமிடம்:

**எம். சூரி**

14, A. குப்பையர் தெரு,
சென்னை - 1.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilanchelliyan B. A. (Hon